# பேச்சுவார்த்தையை ஐ. தே. க. சீர்குலைக்காது ரணில் தெரிவிப்பு

[கொழும்பு]

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகளை சீர்குலைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு எத்தகைய அவசியமும் இல்லை.

எதிர்க்கட்சித் தலைவரும் ஐ. தே. கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா இவ்வாறு தெரிவித்தார்,

நேற்று நடைபெற்ற பத்தி

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 15 இதழ் 329
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 30-12-1994

## சில தினங்களில் மீண்டும் பேச்சு?

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான 2ம் கட்டப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் சில தினங்களில் ஆரம்பமாகுமென அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்

இது தொடர்பான கருத்துப்பரிமாறல்கள் இருதரப்புக்கும் இடையே நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## மோதல்கள் ஆரம்பமாகியதையடுத்து

# அரசு-புலிகள் சமாதானப்பேச்சு முறிவடைந்துபோகும் அறிகுறி!

### வெரித்தாஸ் சிங்கள சேவை தகவல்

[கொழும்பு]

விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்குமிடையில் மோதல்கள் ஆரம்பமாகியிருப்பதையடுத்து சமாதானப் பேச்சுக்கள் முறிவடையலாம் என வெரித்தாஸ் சிங்கள சேவை தெரிவித்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24ம் திகதி இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் பலியாகினர். 23 பேர் காயமடைந்தனர்.

நேற்றும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ராணுவ முகாம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர். இந்தத் தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தத் தாக்குதல்கள் அதி

(4ம் பக்கம் பார்க்க)

## நத்தார் தினத்தில் கொழும்பில் குண்டுவெடிப்பு பலர் படுகாயம்

(கொழும்பு)

கொழும்பில் குண்டு ஒன்று வெடித்ததில் பலர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் தலைமைச் செயலகம் தெரிவித்தது

கடந்த ஞாயிற்றுக்கிழமை நத்தார் தினத்தன்று மாதம்பிட்டிய மயானத்துக்கு மக்கள் சென்றுவிட்டு வீடுதிரும்பிக்கொண்டிருக்கையில் மேற

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் புதிய சம்பள திட்டம் ஜனவரி முதல் அமுல்!

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கான புதிய சம்பளத்திட்டம் 1995ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

என்று கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரன உறுதியளித்துள்ளார்.

இதேவேளையில்;

கடந்தவாரம் நடைபெற்ற சம்பள மீளாய்வு குழுக் கூட்டத்தில் நிதி, பொதுநிர்வாக அமைச்சின் அதிகாரிகளும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சார்பாக பத்திரிகைச் செயலாளர் திரு. எஸ். கே. சதாசிவம், துணைப்பொதுச் செயலாளர் திரு. ஆ. அருமைநாயகம் ஆகியோரும் கல

(4-ம் பக்கம் பார்க்க)

## பங்களாதேஷில் நேற்று பொது வேலை நிறுத்தம்

(டாக்கா)

பங்களாதேஷில் முக்கிய எதிர்க்கட்சிகள் நேற்று நடாத்திய பொது வேலைநிறுத்தம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டது.

வாகனங்கள் எதுவும் வீதிகளில் காணப்படவில்லை. கடைகள், பாடசாலைகள், அலுவலகங்கள், வாத்தக நிறுவனங்கள் பெரும்பாலும் மூடப்பட்டிருந்தன.

ஒருநாள் நடந்த இந்த வேலைநிறுத்தம் நேற்றுமுன்

(4-ம் பக்கம் பார்க்க)

## மட்டுபகுதியில் புலிகள் தாக்கு ஏழு ராணுவம் படுகாயம்

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் இராணுவ முகாம் ஒன்றின் மீது பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொண்டு இராணுவத்துக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்

(4ம் பக்கம் பார்க்க)

## படகுச் சேவை இன்று இல்லை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வெள்ளிக்கிழமை நடைபெறமாட்டாதென விடுதலைப்புலிகள் அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர்.

## மாலைதீவு கடலில் மூழ்கும் ஆபத்து!

(கொழும்பு)

மாலைதீவு அடுத்த நூற்றாண்டில் கடலுக்குள் மூழ்கிவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மாலைதீவு ஜனாதிபதி முகம்மத் அப்துல்கையூம்பத்திரிகையாளர்களிடம் அண்மையில் தெரிவித்துள்ளார்.

கடல் மட்டம் அதிகரித்து வருவதால் மாலைதீவு கடலுக்குள் இரையாகிவிடும் நிலை இன்னும் சில வருஷங்களில் ஏற்பட்டுவிடும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடல்மட்டத்திலிருந்து 11 அடி 5 அங்குல உயரத்தில் மாலைதீவு உள்ளது. இப்போது கடல் மட்டம் அதிகரித்து வருவதையடுத்து மாலைதீவு கடலுக்கடியில் மூழ்கிவிடும் ஒரு அபாய நிலைக்குள் உள்ளது.

மாலைதீவின் சனத்தொகை இரண்டு லட்சத்து 25 ஆயிரமாகும். இங்கு முஸ்லிம் மக்களே பெரும்பான்மையினராவர்.

மாலைதீவுக்குக்கு ஏற்படவி

[4ம் பக்கம் பார்க்க]

## உலகத் தமிழ் மாநாடு இந்திய ஜனாதிபதி கலந்து கொள்ளமாட்டார்

(சென்னை)

தஞ்சாவூரில் உலகத் தமிழ் மாநாட்டை தொடக்கி வைப்பதற்கு ஒப்புதல் அளித்திருந்த இந்திய குடியரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா சில அவசர அலுவல்கள் காரணமாக விழாவில் கலந்துகொள்ள

(4ம் பக்கம் பார்க்க)

## தாதியர் சட்டப்படி வேலை சுகாதார சேவை சீர்குலைவு

(கொழும்பு)

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் தாதிமார் சட்டப்படி வேலை செய்யும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

கடந்த புதன்கிழமை முதல் இவர்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அரச தாதிமாரின்சட்டப்படி

[4ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

**1995 புத்தாண்டுப் பலாபலன்கள்**

3-1-95 முதல் செவ்வாய் வக்கிரமும், எல்லா இராசிப் பலன்களும் ரூபா 10/- எங்கும் விற்பனையாகின்றன. நூலாசிரியர்:- சத்யா. பாடசாலை உபகரணங்களுக்கு: புத்தகசாலை சுரேகா, யாழ்ப்பாணம். (சி-1355)

**வைத்தியம்**

செங்கண்மாரி (Hepatit s) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1342)

எல்லா விஷயங்களும் அடங்கியது. ஆனால் விலை மலிவானது

**ஆனந்தா**
பஞ்சாங்கக்
**கலண்டர்**
ரூபா 30/– மட்டுமே!
(ஏ-4613)


# இன்று

(மானிப்பாய்)

யாழ். செயலக நலன்புரிக் கழகம் நடாத்தும் ஒளிவிழா இன்று 30-ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-30 மணி முதல் யாழ். வை, எம், சி. ஏ. மண்டபத்தில் நடைபெறும். —71

0 0 0

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பணபாட்டுப் பேரவையினர் தொண்டமனாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடாத்திவரும் வாராந்த நிகழ்வுகளில் இன்று 30ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 2-30 மணியளவில சுவாமி சித்ரூபானந்தா கருத்துரை வழங்குகிறார். அறிமுக உரையை ஆசிரியர் இரா. திருஞானசம்பந்தன் நிகழ்த்துகிறார். —ம

0 0 0

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் விசேட பொதுக் கூட்டம் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மணிக்கூண்டு வீதியில் உள்ள மேற்படி சபை மண்டபத்தில் சபையின் தலைவர் திரு. வை. செந்தில்நாதன் தலைமையில் இடம்பெறும். —154

0 0 0

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண சபையின் பிரதிச்செயலாளராகக் கடமையாற்றிய அமரர் சி. சடாட்சர சண்முகதாஸின் 31ம் நாள் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில பேராசிரியர் வி. சிவசாமி தலைமையில் நடைபெறவுள்ளது. -ம

0 0

[யாழ்ப்பாணம்]

யாழ்.செயலகத்தில் உள்ள வேலணை ஊர்காவற்றுறை பிரதேசச் செயலகங்களில் இன்று 30-ம் தேதி காலை 10-00 மணியளவில் வதிவிட வேளாண்மைப் போட்டி தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடை பெறும்,

(4ம் பக்கம் பார்க்க)

# ரியூசன் வகுப்புக்கள் நடத்தும் ஆசிரியர்கள் மீது நடவடிக்கை

(கொழும்பில்)

பாடசாலைக் கல்வியை பாதிக்கக்கூடிய முறையில் தனிப்பட்ட ரியூசன் வகுப்புக்களை நடாத்தும் ஆசிரியர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை எடுக்க அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக கல்வி அமைச்சர் திரு. ரிச்சர்ட் பத்திரான தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் பேசுகையில் இதனை தெரிவித்த அவர், அங்கு மேலும் பேசுகையில், நாட்டில் உள்ள ககல மாணவர்களுக்கும் சமமான கல்வி வாய்பபை பெற்றுக் கொடுக்கும் பொருட்டு தேசியக் கல்வித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.

அடுத்த வருடம் முதல் செயல்படுத்தப்படவுள்ள ஆசிரியர் சேவைத் திட்டம் மூலமாக ஆசிரியர்களின் சம்பள உயர்வு செயல்படுத்தப்படவுள்ளதுடன் அவர்களின் கௌரவம் பாதுகாக்கக்கூடிய திட்டங்கள் நடைமுறைப்படும்.

ஆசிரியர்கள் தமது புனிதமான கடமையை சேவை உணர்வுடன் செய்யவேண்டும் தியாக உணர்வுடன் ஆசிரியர்கள் தம் பணியை மேற்கொள்ள வேண்டும். அரசு அதன் வாக்குறுதிகளை செயல்படுத்த உறுதியுடன் உள்ளது என்றார். -சி

# தேசிய அடையாள அட்டைகள் துரிதமாக பெற ஏற்பாடு

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டைகளை துரிதகதியில் விநியோகம் செய்யும் முகமாக ஆட்பதிவுத் திணைக்களம் மாவட்டப் பிரதிநிதிகளை நியமித்துள்ளது.

விண்ணப்பப் பத்திரங்களில் ஏற்படும் தவறுகள், குறைபாடுகள் உட்பட வேறு காரணங்களினால் சிலருக்கு அடையாள அட்டைகளைப் பெறுவதில் சிரமங்கள் ஏற்படுகின்றன.

விண்ணப்பங்களை அனுப்பி 10நாட்களுக்குள் அடையாள அட்டையை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் கூறுகிறது.

ஆனால் விண்ணப்பப் படிவங்கள் உரிய முறையில் நிரப்பப்படாவிட்டால் குறிப்பிட்ட கால எல்லைக்குள் வழங்க முடியாமல் போகும். இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காக மாவட்டப் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். விண்ணப்பங்கள் அனுப்பி குறிப்பிட்ட கால எல்லைக்குள் அடையாள அட்டை கிடைக்காது போனால் மாவட்டப் பிரதிநிதியான உதவி ஆணையாளரிடம் சென்றுவிசாரிக்குமாறு திணைக்களம் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. ம-சி

# இலங்கைக்கு பல கப்பல் கம்பனிகள் ரூ.1000 கோடி வழங்க வேண்டும்

(கொழும்பு)

பல கப்பல் சேவைக் கம்பனிகள் இலங்கைத் துறைமுக அதிகார சபைக்கு நிலுவையாக 1000 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையை செலுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது.

சரியான கணக்கு வைப்புகள் பின்பற்றப்படாததால் இத்தொகைப் பணத்தை அறவிட முடியவில்லை. பணத்தை மீளப் பெறும் புதிய திட்டத்தின்கீழ் கப்பல் ஒன்று கொழும்புத் துறைமுகத்தை விட்டுப் புறப்பட்ட 15 நாட்களுக்குள் அதிகாரசபை பணக் கணக்கு விபரங்களை குறிப்பிட்ட கப்பல் கம்பனிக்கு சமர்ப்பிக்கும்.

செலுத்த வேண்டிய தொகையை கப்பல் கம்பனி வழங்குவதற்கு இரண்டு வார கால அவகாசம் வழங்கப்படும். புதிய திட்டம் அடுத்த மாதத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. ம-சி

கட்டுநாயக்காவில்

# 3லட்சம் அமெ. டொலருடன் இளம் பெண் கைது

(கொழும்பு)

3 லட்சம் அமெரிக்க டொலருடன் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில வந்திறங்கிய இளம் பெண் ஒருவர் விமான நிலைய பொலிசாரிடம் வகையாக மாட்டிக் கொண்டாராம்.

சென்னையிலிருந்து ஏயார் லங்கா மூலம் பயணம் செய்த பிரஸ்தாப பெண்மணி தற்போது பொலிசாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சம்பந்தப்பட்ட இளம் பெண்ணைச் சந்திக்க வந்த கொட்டாஞ்சேனைப் பகுதியைச் சேர்ந்த மூன்று ஆண்கள் குறித்தும் விசாரணை நடைபெற்று வருகிறதாம். -க

# கல்வி மேம்பாட்டு கழக ஆசிரியர் தெரிவு விபரம்

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்டத்தில் கல்வி மேம்பாட்டுக் கழக ஆசிரியராகக் கடமையாற்றத தெரிவுசெய்யப்பட்டோர் பெயர் விபரம் தமிழீழக் கல்விக்கழக நடுவப் பணியகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இவர்களுக்கான குறுகியகாலப் பயிற்சிகள் நேற்றுத் தொடக்கம் 31ம் திகதிவரை கழக நடுவப் பணியகத்தில் நடைபெறுகின்றது.

தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர் பெயர் விபரம் வருமாறு.

விஞ்ஞானம்: ச, ஸ்ரீதரன், செல்விகள் யலியற் சௌந்தரநாயகி, ஜமுனா குலசிங்கம், ந. ஜெயந்தன், இ, அருள்நேசன், செல்விகள் கே. துரைராஜா, கோ. கனகசபை, செல்வி ர. ஆனந்தவடிவேல், திருமதி விஜயசெல்வி சிவகுமார், சொ. சிவகுமார், கோ. இராகவன், சொ. அமிர்தலிங்கம்.

கணிதம்: ந. சிறீமுருகதாஸ்காந்தன், மு. நடராசா, க. மகேந்திரகுமார், வே, சிவசீலன், இ. ஜெயகாந்தன், ப. அசோகன், மா. அருவதனன், செ. முரளீதரன், செல்வி யோ. கதிரவேற்பிள்ளை, க. முரளீதரன் செல்விகள் வ, ஜெயஸ்ரீ. ஆ. சிவபாலன்.

சித்திரம்: செல்விகள் ம. தர்மதுரை, ரா. புஸ்பராசா. புளோரின் நைல்ஸ் ஜெயநாதன், சு. சிவலிங்கம், கௌசல்யா சிவகுமாரசர்மா. பா. பிரபாகரன்.

சங்கீதம்: செல்விகள் அ. பத்மநாத சர்மா, த. சோமசுந்தரம், திருமதி த. தயாபரன், செல்விகள் சு. கணேசன், அ. குணசேகரம்

நடனம்;- திருமதி விமலகுமாரி ஸ்ரீரவிகுலன், செல்விகள் வ. சிவஞானம், ப. தருமலிங்கம், வ. கந்தசாமி

ஆங்கிலம்:- செல்விகள் ஜெ. சோமசுந்தர சர்மா. அ. கந்தையா, வா. சிவப்பிரகாசம், ஆ, மரியரீற்று, ரா. செல்வநாதன், பொ. குமாரசிங்கம், செல்விகள் வி அந்தோனிப்பிள்ளை, உஷாநந்தினி சிவநேசன், வஜீதா தருமராஜா, த. ஆனந்தவடிவேல், செல்விகள் கீ. சங்கரப்பிள்ளை, உ. குலசேகரம்

சிறுப்பிட்டியில் இன்று

# கிராமிய பாசறை மாதாந்த நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

கிராமியப் பாசறை மாதாந்த நிகழ்ச்சி சிறுப்பிட்டி பூமகள் சனசமூக நிலையத்தில் இன்று 30-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3-00 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வலிகாமம் அரசியற்துறைப் போறுப்பாளர் திரு. திருக்குமரன் தேசியக் கொடியை ஏற்றி வைப்பார். இரவு நிகழ்ச்சிகள் இரவு 7-00 மணிக்கு ஆரம்பமாகின்றது.

பூமகள் சனசமூக நிலையத் தலைவர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் கிராமியப் பாசறைசிறுப்பிட்டி பொறுப்பாளர் திரு. ரூபன் வலிகாமம் அரசியல் துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி பைரவி: கோப்பாய் வட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. ஸ்ரீதர், கோப்பாய் பிரதேச செயலர் திரு கேதீஸ்வரன், அரசியல் பயிற்சிக் கல்லூரி பொறுப்பாளர் மனோ ஆகியோர் கருத்துரை வழங்குகின்றனர்,

கலை நிகழ்வுகளாக நாட்டிய நடனம், இசைக் கச்சேரி நடனம், நாடகம் போன்றவை இடம் பெறுகின்றன. (ம)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1995-01-23 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

பயிராக்கவியல் / மிருக விஞ்ஞான / விவசாயப் பொருளியல் / விவசாயப் பொறியியல் / விவசாய இரசாயனவியல் / விவசாய உயிரியல் / தற்காலிக உதவி விரிவுரையாளர் / தற்காலிக செயன்முறைக் காட்டுநர்.

சம்பள அளவுத் திட்டம்:—

1. தற்காலிக உதவி விரிவுரையாளர்: ரூபா 5,270/- (நிலையானது) மாதமொன்றுக்கு
2. தற்காலிக செயன்முறைக் காட்டுநர்; ரூபா 4,420/- (நிலையானது) மாதமொன்றுக்கு

ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும்யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் திலுள்ள மக்கள் வங்கியின் சிறப்பங்காடிக் கிளை அல்லது பல்கலைக்கழக சிறுப்பரின் முகப்பு மேசையில் 20/- ரூபாவைச் செலுத்தி இப் பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களையும் இதர விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் படிவங்களையும் இதர விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக் கட்டளை / தபாற் கட்டளையுடன் 23X10 ச. மீ அளவுடைய சுய முகவரியிட்ட ரூபா 1/- முத்திரை யொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும்.

விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

மு. கு.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் இதர விவரங்களையும் கொழும்பு-13, ஆட்டுப்பட்டித் தெரு, 154-ம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாணக் கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1994-12-28

[ஏ-4614]

### மணிவாக்கு

மூட்டைப்பூச்சி போல பிறரை இம்சித்து வாழாதே. எலியைப் போல் திருடி வயிற்றை வளர்க்காதே. 'செல்' லைப்போல பிறர் பொருளைக் கெடுத்து மகிழாதே. தேனியைப் போலவும் எறும்பைப் போலவும் உழைத்து உண். அது உனக்கு அமைதியையும் அன்பையும் தரும்.

- கிருபானந்தவாரியார்

# குறேசெனியாவுக்குள் புகுந்து ரஷ்யப் படைகள் தாக்குதல்

## 130 பொதுமக்கள் பலி

(குறேசெனி)

செச்செனிய தலைநகர் குறேசெனிக்கு ரஷ்யப் படைகள் புகுந்து விட்டன. ரஷ்யப் படைகள் நடாத்திய தாக்குதலில் 130 க்கும் மேற்பட்ட பொது மக்கள் உயிரிழந்துள்ளனர். பல கட்டிடங்கள் தீக்கிரையாகின.

100 டாங்கிகளும் 13,800 ரஷ்யத் துருப்புகளும் நேற்று முன்தினமிரவு மிகக் கடும் தாக்குதலுடன் குறேசெனிக்குள் நுழைந்தன. ரஷ்யப் படைகள் தலைநகருக்குள் நுழைவதை தடுக்க செச்செனிய போர் வீரர் மிகக் கடும் எதிர்த் தாக்குதலை தொடுத்தனர்.

தற்போது குறேசெனியின் புறநகர்ப் பகுதியில் கடும் சண்டை நடைபெறுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ரஷ்ய விமானங்கள் தொடர்ந்தும் மிகக் கடுமையான விமானத் தாக்குதலை நடாத்தி வருவதால் பொது மக்களின் உயிரிழப்பு அதிகமாயிருக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. செச்செனியா மீது ரஷ்யப் படைகள் மேற்கொண்டுள்ள அடக்குமுறை நடவடிக்கைகளை ஐ. நா. வோ மேற்குலக நாடுகளோ கண்டிக்காதையிட்டு இஸ்லாமிய நாடுகள் கடும் சீற்றம் கொண்டுள்ளன.

இதேவேளை ரஷ்யப் படைகள் நேற்று முன்தினம் செச்செனிய புறநகர்ப் பகுதியில் அனாதைச் சிறுவர்கள் இல்லத்தின் மீதும் குண்டுத் தாக்குதலை நடாத்தியுள்ளன. (சி)

## அகதிகள் பாதிப்பு

(கோப்பாய்)

சிறுப்பிட்டி பகுதியில் இடம் பெயர்ந்தவர்களுக்கென அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட அகதிமுகாம் கடந்த சில வாரங்களாக பெய்த கடும் மழையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் இம்முகாமிலுள்ள சுமார் 20 குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இம்முகாமில் போதிய சுகாதார வசதிகள் இல்லையென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. :160

## நமது நோக்கு

### இந்து சமுத்திரத்தில்...!

இந்து சமுத்திரத்தில் சூறாவளிகள் ஏற்பட்டு அனர்த்தங்கள் விளைவது அன்றாட நிகழ்ச்சிகள்.

ஆனால் - இன்று இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பல அரசியல் சூறாவளிகள் ஏற்பட்டு மக்களைத் தொல்லைப்படுத்தும் காட்சிகள் தென்படுகின்றன.

உலகின் பல்வேறு பிராந்தியங்களில். நாடுகள் கூட்டுக்கள் அமைத்து, சந்தைப் பொருளாதாரத்தின் போட்டியைச் சமாளிக்கத் தயாராகின்றன.

ஆனால் - இப்பகுதியிலுள்ள 'சார்க்' அமைப்பு வலுவிழப்பதன் காரணம் என்ன?

அதன் அங்கத்துவ நாடுகள் ஒன்றையொன்று குற்றம் சாட்டிக் கொண்டு செயற்படுவதால், நல்லுறவுகள் சீரழிகின்றன.

பாகிஸ்தானின் ஒரு பகுதியில், ஷியா, சன்னி முஸ்லீம்களிடையே தோன்றிய பகைமை, கராச்சிப் பகுதியில் வன்முறைகளைத் தூண்டியுள்ளன.

இதற்கு எண்ணை ஊற்றுபவர்கள் யார்? அண்டை நாடுகள் சிலவற்றைச் சந்தேகத்தோடு பார்க்கிறது பாகிஸ்தான்.

பங்களாதேஷில் - எதிர்க்கட்சிகள் வரிந்து கட்டிக் கொண்டு அரசைக் கவிழ்க்கும் கிளர்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர் அதனால் - ஏற்கனவே வறுமை நாடுகளின் பட்டியலில் இடம்பெற்ற அந்த நாட்டின் வறுமை மேலும் அதிகரிக்கிறது.

நேபாளத்தில் - பாரதம் சார்பான நேபாள காங்கிரஸ் தேர்தலில் தோல்வி கண்டுள்ளது.

இலங்கையில் - ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும், அமைதித் தீர்வுக்கான ஆர்வம் குறைந்தது ஏன்? முட்டுக்கட்டை போடுவது யார்?

பாரதத்தில் - காஷ்மீர்ப் பிரச்னை கட்டுமீறிப் போவதற்குப் பாகிஸ்தான் காரணமெனப் பகிரங்கமாகவே பாரதம் பேசி வருகிறது.

அத்தோடு - தென்மாநிலத் தேர்தலில் தோல்வி கண்ட காங்கிரஸ் கட்சியில் தலைமைத்துவத்திற்குப் போட்டி ஆரம்பித்துள்ளது.

மறைமுகத் தலையீடுகள் மறைந்து, அரசியற் சூறாவளிகள் தணிந்த பின்தான், பிராந்தியப் பொருளாதாரக் கூட்டுச் சிந்தனை வளரும் போல் தெரிகிறது!

## பலதும் பத்தும்

### சுதுமலை வடக்கில்

கூடியிருந்து கும்மளம் போடாது.........ஊர் வம்பு பேசாது...... அறிவு தேடப் பொதுப் படிப்பகங்களுக்குச் செல்லும் போக்கு அதிகரித்து வருகிறது.

போராளிகளின் நினைவாகப் படிப்பகங்களும், பொதுமன்றங்களும் பெருகி வருவதும் இதற்குத் துணை புரிகிறது.

சுதுமலை வடக்கு----- நாமகள் சனசமூக நிலையம் பலர் கூடியிருந்து பத்திரிகைகளை மாத்திரமா படிக்கிறார்கள்! வாசலிலே காணப்படும் கரும்பலகையிலே எழுதப்பட்டிருக்கும் திருக்குறளையும் அதன் கருத்தையும் படிக்கிறார்கள். தெருவாற் போகிறவர்களும் சற்று நின்று- --கவனித்து--- வாசித்துவிட்டுப் போகிறார்கள்!

சமுதாயம் சீராக வளரச் சிந்தனை வளர்ச்சி அவசியம திருக்குறள் போன்ற கருத்துக்கள் இப்படி வளர்க்கப்படுவதும் நல்ல முயற்சி தான்?

—மயூரன்

## இராசி பலன்

30 - 12 - 1994

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு மார்கழி 15)

திரயோதசி முன்னிரவு 9-22 வரை: அனுஷம் பி. ப. 2-22 வரை: பிரதோஷ விரதம் இராகுகாலம் 10-59 முதல் 12-29 வரை; சுபநேரம் காலை 6-29 முதல் 7-59 வரை:

மேடம்- முயற்சி தாமதம், வேலைப்பளு, மனச்சுமை.

இடபம்- நியாயப்படுத்துதல், பொருள் வரவு, குடும்ப மகிழ்ச்சி

மிதுனம்- வாக்கு வன்மை. தொழில் பாராட்டு, விருந்துபசாரம்

கடகம்- மனவேதனை, குடும்பத் தொல்லை, அலைச்சல்

சிங்கம்- எதிர்வாதம், சகோதர வேதனை, மனக் குமுறல்

கன்னி- மாமனார் வருகை, தொழில் உறவு, பயண நன்மை

துலாம்- குறை கேட்டல், பயஉணர்வு, அகால உணவு

விருச்சிகம்- பொதுசன மதிப்பு, பெண் உதவி, கௌரவம்

தனுசு- கடமை தவறுதல். அந்நியர் விரோதம், யோசனை

மகரம்- காரிய சித்தி, தெய்வீக வழிபாடு, மனநிறைவு

கும்பம்- விரும்பிய துகைகூடல், பதவியுயர்வு- சயன சுகம்

மீனம்- விரோதிகளை ஜெயித்தல், முறுகல் நிலை, உபாதை

ஜோஸ்யர்

# இனப் பிரச்னை தீர்வுக்கு சுயாட்சி நிர்வாகத்தின் கீழ் அதிகாரப் பகிர்வு தேவை

(கொழும்பு)

அதிகாரத்தை பரவலாக்கி பகிர்ந்தளிப்பதன் மூலமே இனப்பிரச்னைக்கு தீர்வு காண முடியும். ஒற்றையாட்சி அமைப்பில் சுயாட்சி நிர்வாகத்தின் கீழ் அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளும் முறை மிகவும் பொருத்தமானது.

இவ்வாறு நவசமசமாஜக் கட்சி அரசியல்பீட அங்கததவர் வி. திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்;

இத்தகைய ஆட்சிமுறையை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக அரசியல் யாப்பு திருத்தப்பட வேண்டும். எமது கட்சி இந்த யோசனையை அரசியல் யாப்பு தொடர்பான விஷேட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பித்துள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை இலங்கைக்கு பொருத்மற்றது. அது ஒழிக்கப்பட வேண்டும். தற்போதைய அரசியல் யாப்பை தமது கட்சி எப்போதும் எதிர்த்து வந்துள்ளதாசவும் தெரிவித்தார்: (சி)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-12-30 வெள்ளி

இரவு

8-01 கலை மஞ்சரி, நிகழ்ச்சியில் முதலில் நூல் அறிமுகம். அறிமுகமாகும் நூல்கள் மெற்றூஸ் மயில் எழுதிய ''ஆனையை அடக்கிய அரியாத்தை'' திருமறைக் கலாமன்றம் வெளியிட்ட ''ஆற்றுகை'' என்னும் காலாண்டு சஞ்சிகையின் முதல் இதழ். அதனை அடுத்து சிறுகதை, மலரன்னை எழுதிய ''விறகு', சிறுகதையை தொடர்ந்து கவிதை. ந. கிருஷ்ணா எழுதிய ''திலீபனின் தியாகம் திறவுகோலானது'. ஆகியன கலை மஞ்சரியை அலங்கரிக்கும்.

8-25 கணப்பொழுது சி. கண்ணம்மா எழுதிய ''லெப்ரினன்ட் பவான்''

8-30 செய்திகள்

8-40 அரசியல் அரங்கம்- வே. பாலகுமாரன் எழுதிய ''10 வருட போபால் நகரமக்களின் பரிதவிப்பு''

8-50 வாத்திய கானங்கள்

9-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

1994-12-31 சனி

காலை

7-02 மாவீர வணக்கம்

7-15 நீங்கள் கேட்டவை

7-30 செய்திகள்

7-35 பத்திரிகைச் செய்திகள்

7-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

8-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

## வெள்ளி விருந்து

### சிவசின்னங்களை பேணுவதால் நம்பிக்கை பிறக்கும்

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்டு
ஊனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய பொதுத் திருப்பதிகம் அது. தனித்திருவிருத்தப் பதிகத்தில் அமைந்தது. நாலாம் திருமுறை.

சிவ சின்னங்களை அணிந்தும் தாங்கியும் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடுபவர்கள் அனைவருக்கும் அமையவேண்டிய குணநலன் அது.

சோழ அரச மரபு வீரத்திற்கும் நீதிக்கும் மெருகை எடுத்துக்காட்டும் எனலாம். இமயமலையில் புலிக்கொடி பொறித்துப் புவி ஆண்ட அரசர் அக்குலத்தில் பலர். அவர்களில் புகழ்ச் சோழரும் ஒருவர். பெயரே அவர் புகழைப் பெருமைப்படுத்துவதாக அமைந்துள்ளது.

ஒரு சமயம் அவருடைய பட்டத்து யானையையும் பாகர்களையும் எரிபந்த நாயனார் எரித்துவிட்டார். பட்டத்து யானை இறந்த செய்தி கேட்ட சோழ அரசர் பகையரசர் தான் அழித்திருக்கவேண்டும் என்று கருதிப் போர்க்கோலம் பூண்டுவந்தார். புகழ்ச்சோழர் படுகளத்தில் பகைப்புல அரசர்களைக் காணவில்லை, பத்தரையே கண்டார்.

எஞ்சிய பாகர்கள் பட்டவர்த்தனம் யானையையும் பாகரையும் கொன்றவர் அவரே என்று சொன்னார்கள். அரசர் எண்ணிப் பார்க்கிறார்... பிழை நிகழால் சிவனடியான் இதைச் செய்திருக்கமாட்டார் என்று சேனையை விலக்கினார். குதிரையிலிருந்து இறங்கினார். சிவனடியார் கோபம் கொள்ளத் தவறுசெய்துவிட்டேனேஎன்று பயந்தார் உலக மன்னர். பத்தரை வணங்கிநின்று - யானை செய்த அபராதத்திற்குப் பாகரோடு அதனை மாள அழித்தது போதுமோ தான்அருள்செய்ய வேண்டும் என்று பணிந்து வேண்டி நின்றார். அரசர் சிவசின்னத்தில் வைத்த மதிப்பு என்னே! பெருமை அறிந்து அணிந்து நாமும் சிவசின்னங்களைப் பேணிக்கொள்வோமேயானால் நம்பிக்கை பிறக்கும்.

— சிவ. சண்முகவடிவேல்

பங்களாதேஷில்

# எதிர்க்கட்சியினர் அனைவரும் இராஜினமா

[டாக்கா]

பங்களாதேஷ் நாடாளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் நேற்றுமுன்தினம்தமது பதவிகளை ராஜினமாச்செய்துள்ளார்கள்.

பங்களாதேஷில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலை, தற்போதைய அரசு பதவி விலகி, ஒரு காபந்து அரசின் கீழ் நடாத்தவேண்டுமென்று எதிர்க்கட்சியினர் விடுத்த கோரிக்கையை அரசு நிராகரித்துவிட்டதினாலேயே, எதிர்க்கட்சியினர் அனைவரும் தமது பதவிகளை ராஜினமாச்செய்துவிட்டதாக, எதிர்க்கட்சித் தலைவர் திருமதி ஷேக்ஹசீனா பேகம் தெரிவித்தார்.

[வி-சி]

### ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவை சங்க வலிகாமம் வடக்கு பிரிவின் ஒளிவிழா இன்று வெள்ளி காலை 10 மணிக்கு மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெறும்.

மரங்கள் வளர்வதனால் – மீள உரமது வளர்கிறது

# தமிழீழ இளநிலைத் தேர்வு கூடுதல் புள்ளி பெற்றோர்

]யாழ்ப்பாணம்[

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினரால் யாழ் மாவட்டத்தில் 8 ம் ஆண்டு மாணவர்களுக்கென நடாத்தப்பட்ட இளநிலைத் தேர்வில் தமிழ்மொழி, கணிதம், ஆங்கிலம், வரலாறும் சமூகக்கல்வியும், விஞ்ஞானம் ஆகியபாடங்களில் கூடுதல் புள்ளிகள் பெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு:

தமிழ்மொழி:

புவனேந்திரன் ஈழநாதன் 98 - உடுப்பிட்டி அ. மி., ஜனனி தில்லைநாதன் 97-வேம்படி மகளிர் கல்லூரி, சயந்தி குகதாசன் 97 - வேம்படி மகளிர், தில்லையம்பலம் நிசாந்தன் 96 - ஹாட்லி, கிரிஜா மகேந்திரன் 96 - யாழ்ப்பாணக் கல்லூரி, ரங்கநாதன் ஜேயப்பிரசன்னு 95 - ஹாட்லி

கணிதம்

அரியநாயகம் துஷ்யந்தன் 100 - உடுப்பிட்டி அ. மி.. சிவகுமாரன் கிருஷ்ணகுமார் 99 - யாழ் இந்து, சிவகலா சிவசுப்பிரமணியம் 99 - மெதடிஸ்த மி. பெ. உ.பா., சிவதி சிவலிங்கராசா 98, சுண்டுக்குளி மகளிர், பிறேமளா செல்வராசா 98 - சுண்டுக்குளி மகளிர்

ஆங்கிலம்:

விநாயகமூர்த்தி துஷ்யந்தன் - 100 யாழ். இந்து. அருமைநாயகம் டினேஸ் பெனேசார் - 99 பரியோவான், மகேஸ்வரன் நிற்றகுலன் 99 - பரியோவான், ரத்தினம் ரஜீவன் - 99 பரியோவான். மகேந்திரநாதன் சுபேந்திரன் 90 - பரியோவான், கைலைநாதன் வாகீசன் 99 - பரியோவான், வைதேகி வேலாயுதம் 98 - மெதடிஸ்த மி- பெ: உ. பா, இராஜசிங்கம் பிரசாந்தன் 98 - யாழ்ப்பாணக் கல்லூரி;

வரலாறும் சமூகக் கல்வியும்

ஜெயருபா தனபாலசிங்கம் 100 - வேம்படி மகளிர், சிவகுமாரன் கிருஷ்ணகுமார் 96- யாழ். இந்து, கணபதிப்பிள்ளை குமணன் 96- ஹாட்லி, தர்மராசா சிறீனிவாசன் 96- ஹாட்லி. சிவபாதசுந்தரம் ஜெயராகன் 96 - உடுப்பிட்டி அ. மி, ஜேசுதாசன் ஜான்சன் 97 - புனிதபத்திரிசியார், குமாரி புஸ்பா இலங்கைநாதன் 96 - வேம்படி மகளிர், சுவதி சிவலிங்கராசா 96 - சுண்டுக்குளி மகளிர்.

விஞ்ஞானம்

விநாயகமூர்த்தி துஷ்யந்தன் 97 - யாழ், இந்து.

---

## பரீட்சை நிலைய மாற்றம்

(யாழ்ப்பாணம்)

நாளை 31ம் திகதி நடைபெறவுள்ள பயிலுநர் ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கு நல்லூர் தெற்கு விக்னேஸ்வர வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த பரீட்சை நிலையம் 70/20 அரசடி றேட்டில் அமைந்திருக்கும் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி ம. ம. வித்தியாலத்துக்கு மாற்றப்பட்டுள்ளது என வலயம் 1ன் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார், -இ

---

கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படி குண்டு வெடித்ததாகவும் இதில் பலர் படுகாயமடைந்ததாகவும் இதுபற்றி தற்போது தீவிர விசாரணைகள் நடைபெற்றுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (வி-இ

---

# வடகிழக்கு மாகாணத்துக்கு வெள்ளநிவாரணக் குழு

(கொழும்பு)

வடக்கு—கிழக்கு மாகாண வெள்ள நிவாரணக் குழு ஒன்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவின் விசேட பணிப்புரையின் பேரில் அமைக்கப்பட்டுள்ளது.

இக் குழுவில் மட்டு. எம்.பி. ஜோசப் பரராசசிங்கம் உட்பட பலர் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

மேற்படி குழு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பான முழு விபரத்தையும் ஆராய்வதுடன் மேற்கொள்ளவேண்டிய நிவாரண நடவடிக்கைகள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது. க-இ

---

# தமிழ் சிங்கள அகராதி வெளியிடப்பட்டது

கொழும்பு)

இலங்கைவரலாற்றில்முதல் தடவையாக தமிழ் சிங்கள அகராதி ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இந்த அகராதி நூலின் வெளியீட்டு வைபவம் நேற்று பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி வைபவத்தில் இந்த நூலில் ஆசிரியர் கே. என். டி. பீரிஸ் உரையாற்றுகையில்

வரலாற்று ரீதியில் தமிழ் சிங்கள மக்களைப் போலவே இந்த இருமொழிகளும் ஒன்றை-ஒன்று பூசித்து வந்துள்ளன. தமிழ் - சிங்கள மொழிகளை அறிந்து கொள்ளும் விதமாக இதுவரை அகராதி நூல்கள் எதுவும் வெளிபிடப்படாததினாலேயே இந்த நாட்டில் இனப்பிரச்னை தோன்றுவதற்கும் ஒரு காரணம் என்று கூறலாம்.

20 ஆயிரம் சொற்கள் அடங்கிய இந்த அகராதி நூலை தயாரிப்பதற்கு எனக்கு பத்து வருடங்கள் பிடித்துள்ளது. இந்த நூலில் உள்ள ஒவ்வொரு தமிழ் சொற்களுக்கும் சிங்கள மொழியில் உச்சரிப்பும் கருத்தும்கொடுக்கப்பட்டுள்ளது என்று கூறினார். [வி-இ)

---

இன்று

[2ம் பக்கத் தொடர்ச்சி]

கிராம அலுவலர்கள், தொண்டர் தாபனங்கள், விவசாயப் போதனாசிரியர்கள், பொருண்மிய மேம்பாட்டு நிறுவன ஆலோசகர்கள் யாவரையும் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

---

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-

மலையக கல்லூரியை திறக்க

# சந்திரிகா போட்ட உத்தரவு அதிகாரிகள் இணங்க மறுப்பு

(கொழும்பு)

மலையகத்தில் பத்தன சிறிபாத கல்வியியல் கல்லூரியை மீண்டும் திறந்து செயற்படுத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பணிப்புரை வழங்கியும் நிர்வாகிகள் அதனை செயற்படுத்தவில்லையென்று தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:

மலையகத் தமிழ் மாணவருக்கான இக்கல்லூரி முன்னைய அரசாங்கத்தின்மாற்றாந்தாய் மனப்பான்மையால் பிரச்னை உரிய முறயில்அணுகப்படாது கடந்த பல மாதங்களாக மூடப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கு தெரியப்படுத்தப்பட்டது. ஜனாதிபதியும் அப் பிரச்னையை ஆராய்ந்து மலையகத் தமிழ் மாணவர்களுக்காக கல்லூரி மீண்டும் திறக்கும்படி பணிப்புரைவழங்கியிருந்தார். ஆனால் நிர்வாக இயந்திரம் அதற்கு செவி சாய்க்கவில்லையென குற்றம்சாட்டப்பட்டுள்ளது. கே இ

---

பேச்சுவார்த்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

ரிகையாளர் மாநாட்டில் திரு. ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

சமாதானப் பேச்சுவார்த்தைகள் பொதுசன ஐக்கிய முன்னணியுடனோ அல்லது ஐ. தே. கட்சியுடனோ நடத்தும் ஒரு பேச்சுவார்த்தை அல்ல அது இலங்கை அரசுடன் நடாத்தப்படும் பேச்சுவார்த்தையாகும்.

இலங்கையில் நடைபெறும் வேலைநிறுத்தங்களுக்கும் ஐ. தே. கட்சிக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை, இந்த வேலை நிறுத்தங்களுக்கு ஐ. தே. கட்சியினர் பின்னணியாக இயங்கி வருகின்றார்கள் என்ற குற்றச்சாட்டுகளை நான் வன்மையாக மறுக்கிறேன்.

கடந்தகால ஆட்சியில் அனைத்து அமைச்சர்களும்ஊழல்கள் புரிந்துள்ளனர் என்பதையும் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். உண்மை நிலைகளை விசாரணை செய்து சட்டப்படி குற்றவாளிகளாகக் காணப்படுபவர்கள்மீதே குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படவேண்டும்.

குற்றவாளிகளாகக் காணப்படுவோர் ஐ. தே. கட்சியிலிருந்து நீக்கப்படுவார்கள் என்றார். வி இ

---

ஆசிரியர் புதிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் வருமாறு; புதிய சம்பளத்திட்டம் அடங்கிய விபரமான வர்த்தமானி விரைவில் வெளியிடப்படும். இவைதொடர்பான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு சுற்று நிருபங்கள உரிய அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

முதல்கட்ட உள்வாங்கலின் பின் ஆசிரியர்கள் ஒரு வகுப்பில் இருந்து அடுத்த வகுப்பிற்கு செல்வதற்கு சேவைக் காலத்தில் மூன்று ஆண்டுகள் கஷ்டப் பிரதேசத்தில் சேவையாற்றி இருத்தல் வேண்டும். ஆசிரியர்கள் லீவுபெறுதிருப்பின் பதவி உயர்வின்போது புள்ளிகள் வழங்கப்படும்,

ஆசிரியர் சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்படும் வயதெல்லை 45 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

ஆசிரியர் சம்பள அதிகரிப்பு பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது: இலங்கை ஆசியர் சேவை யாப்பு தற்சமயம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அது விரைவில் அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்படும்.

ஆசிரியர் சேவை தொடர்பாகதீய சக்திகள் பரப்பிவரும் வதந்திகளை நம்பவேண்டாமென்று கல்வி, உயர்கல்வி அமைச்சசர் ஆசிரியர்களுக்கு வேண்டுகோள் ஒன்றையும் விடுத்துள்ளார். கே-சி-இ

---

# எம்.ஜி.ஆர் நினைவு விருது 10பேருக்கு வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத் திறந்த வெளி அரங்கில் 26 - 12-1994 அன்று நடைபெற்ற மக்கள் திலகம் அமரர் எம். ஜி. ஆரின் 6-வது ஆண்டு நிறைவு நாள் விழாவில் பின்வருவோருக்குக் பட்டம் வழங்கி கௌரவ விருது வழங்கப்பட்டது. இவ்விருதுகளை அனைத்துலக எம், ஜி. ஆர். பேரவையின் தலைவர் பொன் மதிமுகராஜா வழங்கினார்.

லயஞானபூபதி [தவில்) பி. பழனிவேற்பிள்ளை. வில்லிசை வேந்தன் (வில்லிசை] எஸ். வடிவேல், ஸ்வரஞானபூபதி (நாதஸ்வரம்) எம். எஸ். சண்முகநாதன், அறப்பணிச்சக்கரவர்த்தி க. கனகராஜா. மெல்லிசைச்சக்கரவர்த்தி மு. கோபாலகிருஷ்ணன் (கண்ணன்), உலோகக்கலைமாமணி இ. கெங்காதரன், நடிகமாமணி இராபற்குணம். கானமிர்ததிலகம் மு. வர்ணகுலசிங்கம், ஓவியக்கலைச் செம்மல் பெ, சுப்பிரமணியம் (மணியம்), சிற்பவாணர் சி. அமரசிங்கம். (சி)

---

## நிர்வாகசேவை பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிர்வாகசேவை தரம் II/II பரீட்சை அடுத்த வருடம்பங்குனிஅல்லது சித்திரைமாதத்தில் நடைபெறலாமென பிரதிப் பரீட்சை ஆணையாளர் குலரத்தின யாழ். மாவட்ட அரச அதிபருக்கு அறிவித்துள்ளார்.

இப் பரீட்சைக்கான விண்ணப் முடிவு திகதி இன்று 30ம் திகதியென ஏற்கனவே அறிவிக்கப்பட்டது தெரித்தத்தே. 162-இ

---

தாதியர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேலை செய்யும் இயக்கம் காரணமாக ஆயிரக்கணக்கான நோயாளர்கள் கடும் கஷ்டங்களைஎதிர் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. சம்பள அதிகரிப்புக் கோரியும் தொழில் ரீதியான ஏனைய சலுகைகளைக் கோரியும் தாதிமார் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

கொழும்பிலும் மற்றும் மாவட்ட ஆஸ்பத்திரிகளிலும் சுகாதார சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆஸ்பத்திரி வார்டுகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களும், வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெறுவோரும் இதனால் கடும் பாதிக்குள்ளா யிருப்பதாகவும் சுகாதார வட்டாரங்கள் தெரிவித்துள்ளன, (இ)

---

மாலைதீவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கும் ஆபத்தைத் தவிர்ப்பதற்கு மாலைதீவு ஜனாதிபதி பொதுநல அமைப்பு நாடுகளினதும் ஐக்கிய நாடு அமைப்பினதும் உதவியைக் கோரியுள்ளார்.

வருடம்தோறும் கடல் மட்டம் ஒரு அங்குலம்வரை உயர்ந்து வருவதாக கடல் சாஸ்திர விஞ்ஞானிகளின் கணிப்பாகும். (இ)

---

மோதல்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கரித்திருப்பதையடுத்து சமாதானப் பேச்சுக்கள் குறித்து அரசு தீவிரமாக மீளாய்வு செய்து வருகிறது,

புதுவருடத்தின் ஆரம்பத்தில் முதல் நடவடிக்கையாக விடுதலைப்புலிகளுடன் அரசு சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்ளவிருந்தது.

ஆனால் இப்போது புலிகள் அரசு படைகள் இடையில் மோதல்கள் அதிகரித்திருப்பதையடுத்து இரு தரப்பினருக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடையும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. -இ

---

பங்களாதேஷில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தினம் நாடாளுமன்ற எதிர்க்கட்சிகள் அனைத்தும் செய்த ராஜினாமாவைத் தொடர்ந்து நடந்துள்ளது.

எதிர்க்கட்சிகளால் நடாத்தப்படவுள்ள தொடர்ச்சியான வேலைநிறுத்தத்தில் முதல் வேலைநிறுத்தம் இதுவாகும் அடுத்தவாரம் 3நாட்கள் தொடர்ச்சியாக வேலைநிறுத்தம்செய்யப்போவகாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. - கே- இ

---

உலகறதமிழ்

(1ம் டக்கத தொடர்ச்சி)

இயலாது என்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கு தகவல் அனுப்பியுள்ளார்.

இதனையடுத்து குடியரசு துணைத் தலைவர் கே. ஆர். நாராயணனை அனுப்பிவைக்குமாறு செல்வி ஜெயலலிதா கேட்டுக்கொண்டுள்ளார்.

உலகத் தமிழ் மாநாட்டில் குடியரசுத் தலைவரை கலந்துகொள்ள வேண்டாமென திரு. வாழப்பாடி ராமமூர்த்தி கேட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. கே இ

---

மட்டு பகுதியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் உள்ள தம்பராவெளி இராணுவ முகாம் மீது நேற்று அதிகாலை விடுதலைப்புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர். இத்திடீர் தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளதாகபாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது:

விடுதலைப்புலிகள் தரப்பில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட போராளிகள் இத்தாக்குதலை நடாத்தினர்.

நாற்பது இராணுவத்தினர் காவல் புரிந்த இராணுவ காவலரண் ஒன்றை மூன்று மணித்தியாலங்களுக்குள் தகர்ப்பதே புலிகள் குறிக்கோளாக இருந்தது.

மோட்டார் தாக்குதல் மூலமாகவும் சரமாரியான இயந்திரத் துப்பாக்கித் தாக்குதல் மூலமாகவும் புலிகள் தமது கடும் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கெகண்டனர் என ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. வி-இ